செ.வெ.எண்.10/2020 நாள்: 15.08.2020

**விருதுநகர் மாவட்டம்**

**மாவட்ட விளையாட்டு அரங்க மைதானத்தில் நடைபெற்ற 74-வது இந்திய சுதந்திர தினவிழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இரா.கண்ணன்,இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை திறந்த ஊர்தியில் சென்று பார்வையிட்டார்**

இந்திய திருநாட்டின் 74-வது சுதந்திர தினவிழா, விருதுநகர் மாவட்ட விளையாட்டு அரங்க மைதானத்தில் இன்று (15.08.2020) நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இரா.கண்ணன்,இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். பின்னர் காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை திறந்த ஊர்தியில் சென்று பார்வையிட்டார்.

அதனைத்தொடர்ந்து, கொரோனா நோய்த்தடுப்பு பணியின் போது சுந்தரபாண்டியம் பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிந்து வந்த திரு.மு.மோகன் கென்னடி என்பவர் உயிரிழந்ததையொட்டி அன்னாரது வாரிசுதாரரான/மனைவி திருமதி.மோ.சசிகலா என்பவருக்கு மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.25 லட்சத்திற்கான காசோலையினையும், விருதுநகர் வட்டம் சின்னமூப்பன்பட்டி கிராம உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு.மா.முருகேசன் என்பவர் உயிரிழந்ததையொட்டி அன்னாரது வாரிசுதாரரான/மகன் திரு.மு.தங்கமுடி என்பவருக்கு கருணை அடிப்படையில் கிராம உதவியாளர் பதவிக்கான பணி நியமன ஆணையையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இரா.கண்ணன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

மேலும், கொரோனா நோய் பரவலை கட்டுப்படுத்தும் விதமாக தனிமைப்படுத்தும் மையத்திற்கு கல்லூரி மற்றும் பள்ளி கட்டிடங்கள் வழங்கி மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு அளித்த மெப்கோ பொறியியல் கல்லூரி, எஸ்.எப்.ஆர். மகளிர் கல்லூரி, காளீஸ்வரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சங்கரலிங்கம் புவனேஸ்வரி காலேஜ் ஆப் பார்மஸி, வே.வ.வ.பெண்கள் கல்லூரி, ஏ.ஏ.ஏ.பொறியியல் கல்லூரி, ஸ்ரீ வித்யா பொறியியல் கல்லூரி, வி.எஸ்.வி.என்.பாலிடெக்னிக் கல்லூரி, வி.எச்.என்.எஸ்.என். கல்லூரி, சௌடாம்பிகா பாலிடெக்னிக் கல்லூரி, சௌடாம்பிகா பொறியியல் கல்லூரி, தேவாங்கர் கல்லூரி, கலசலிங்கம் கல்லூரி, வி.பி.எம்.எம். கல்லூரி, ராம்கோ பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, சபரி இன்டர்னேசனல் பள்ளி, சேது பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, எஸ்.ஆர்.என்.எம். கல்லூரி, ஸ்ரீகர வித்யா மந்திர் பள்ளி, பி.எஸ்.ஆர்.கல்லூரி ஆகிய பள்ளி மற்றும் கல்லூரி நிறுவனங்களுக்கும், சமூக பொறுப்பு நிதி பங்களிப்பில் அதிகமான நிதியினை ஒதுக்கீடு செய்து மாவட்ட நிர்வாகத்திற்கு முழுஒத்துழைப்பை நல்கி வரும் ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்தார்.

பின்னர், கொரோனா நோய்த்தடுப்பு பணியில் சிறந்த முறையில் களப்பணியாற்றிய காவல்துறையைச் சேர்ந்த 269 நபர்களுக்கும், வருவாய்த்துறையைச் சேர்ந்த 241 நபர்களுக்கும்,

தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையைச் சேர்ந்த 14 நபர்களுக்கும், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு துறையைச் சேர்ந்த 144 நபர்களுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையைச் சேர்ந்த 59 நபர்களுக்கும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையைச் சேர்ந்த 62 நபர்களுக்கும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டப் பணிகள் துறையைச் சேர்ந்த 10 நபர்களுக்கும், நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறையைச் சேர்ந்த 05 நபர்களுக்கும், கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த 02 நபர்களுக்கும், தேசிய தகவல் மையத்தைச் சேர்ந்த 04 நபர்களுக்கும், பொதுப்பணித் துறையைச் சேர்ந்த 01 நபருக்கும் என மொத்தம் 811 நபர்களுக்கு நற்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இரா.கண்ணன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

மேலும், இந்திய சுதந்திரத்திற்காக பாடுபட்ட சுதந்திரப் போராட்ட தியாகிகளை கௌரவப்படுத்தும் விதமாக தியாகிகள் மற்றும் அவர்களது வாரிசுதாரர்களின் வீட்டிற்கே நேரில் சென்று துணை வட்டாட்சியர் நிலையிலான அலுவலர்கள் கதராடை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பூ.பெருமாள்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.மங்களராமசுப்பிரமணியன், திட்ட இயக்குநர் (மா.ஊ.வ.மு) திரு.சுரேஷ், சிவகாசி சார் ஆட்சியர் திரு.ச.தினேஷ்குமார்,இ.ஆ.ப., கூடுதல் காவல் துணைக் காண்காணிப்பாளர் திரு.மாரிராஜன், வருவாய் கோட்டாட்சியர்கள், காவல் துணைக் கண்காணிப்பாளர்கள், வட்டாட்சியர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்.**